தினமணி

பட்டு வளர்ப்பில் ஈடுபடும் மகளிருக்கு இலவச மருத்துவ காப்பீடு திட்டம்

First Published : 12 Jul 2011 07:34:12 AM IST

தருமபுரி, ஜூலை 11: பட்டு வளர்ப்பில் ஈடுபடும் மகளிருக்கன இலவச காப்பீடு திட்ட அடையாள அட்டை அண்மையில் வழங்கப்பட்டது.

தருமபுரி மாவட்டம், மாரவாடி அருகே காமராஜ்நகரில் நடைபெற்ற பட்டு வளர்ப்பு விழிப்புணர்வு முகாமில் பட்டு வளர்ச்சித்துறை இணை இயக்குநர் (பொறுப்பு) ஏ.என்.வேணுகோபால் பேசியது:

கடந்த 20 ஆண்டுகளில் பட்டுவளர்ப்பில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஓர் ஏக்கரில் உற்பத்தியாகும் பட்டுக்கூடுகளின் அளவு இருமடங்காக அதிகரித்துள்ளது. சராசரி பட்டுக்கூட்டின் விலையும் லாபகரமாக உள்ளது. தொழில்நுட்பங்களை விவசாயிகள் முறையாக பின்பற்றினால் அதிக வருவாய் பெறலாம் என்றார்.

வெண்பட்டு வளர்ப்பின் அவசியம், புதிய தொழில்நுட்பங்கள் குறித்து சேலம் மத்திய பட்டுவாரிய விஞ்ஞானி ஜே.ரவிக்குமார் செயல்விளக்கம் அளித்தார். பட்டுவளர்ப்பில் ஈடுபடும் மகளிருக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இலவச மருத்துவ காப்பீடு திட்டம் குறித்து ஐ.சி.ஐ.சி.ஐ. (லம்பார்டு) மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வி.ஆனந்தகுமார் விளக்கினார். முகாமில் பங்கேற்ற பெண் விவசாயிகளுக்கு இலவச காப்பீடு திட்டத்துக்கான அடையாள அட்டை வழங்கப்பட்டது. பட்டு ஆய்வாளர் கே.ராகவேந்திரகுரு, தொழில்நுட்ப உதவியாளர் வி.மணிவண்ணன் உள்பட பலர் பங்கேற்றனர்.

பூதநத்தத்தில்... பென்னாகரம் அருகே பூதநத்தம் கிராமத்தில் நடைபெற்ற பட்டுவளர்ப்பு விழிப்புணர்வு முகாமில் பங்கேற்ற மத்திய பட்டுவாரிய விஞ்ஞானி எஸ்.மாசிலாமணி, மல்பெரி தோட்ட பராமரிப்பு, அதிக மகசூல் பெறுதல் உள்ளிட்டவை குறித்து பேசினார்.

பட்டுவளர்ச்சித்துறை உதவி இயக்குநர் (பென்னாகரம்) கா.தனபால், பென்னாகரம் அரசு பட்டு வித்தக மைய ஆய்வாளர் பக்கிரிசாமி, வேளாண் உதவி இயக்குநர் அ.இளையராஜா உள்பட பலர் பங்கேற்றனர்.

**கேரள விவசாய திட்டத்துக்கு ரூ.4,500 கோடி**

First Published : 12 Jul 2011 01:37:19 AM IST

திருவனந்தபுரம், ஜுலை11: கேரள மாநிலத்தின் குட்டநாடு பகுதியில் விவசாய திட்டங்களை அமல்படுத்த ரூ.4,500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாக அம்மாநில சட்டப்பேரவையில் திங்கள்கிழமை தெரிவிக்கப்பட்டது.

இது குறித்த கேள்விக்கு மாநில விவசாயத்துறை அமைச்சர் கே.பி.மோகனன் எழுத்து மூலம் பதில் தெரிவித்தார். மத்திய கேரளத்தின் ஆலப்புழை மாவட்டத்தில் அமைந்துள்ள குட்டநாடு பகுதி அம்மாநிலத்தின் நெற்களஞ்சியம் என்று அறியப்படுகிறது. இப்பகுதியில் நடைபெற்று வரும் விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் ஒரு திட்ட அறிக்கையை அளித்திருந்தது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் அளிக்கப்பட்ட அறிக்கையின்கீழ், அமல்படுத்தப்பட வேண்டிய 50 வெவ்வேறு திட்டங்களுக்கு மத்திய அரசின் அனுமதி கிடைத்துள்ளது. இதற்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில் மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.இவற்றில் 47 திட்டங்களுக்கு கேரள அரசு விரிவான ஆய்வு நடத்தியுள்ளது.

இதனை செயல்படுத்த மொத்தம் ரூ.4 ஆயிரத்து 500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.இதில் ரூ.4 ஆயிரம் கோடி நீர்ப்பாசனத் துறையினரின் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும்.

இத்திட்டங்களுக்கான செலவில் 75 சதவீதத் தொகையை மத்திய அரசு ஏற்கும் என அமைச்சர் தெரிவித்தார்.

**காய்கறிகள் சாகுபடியில் துல்லிய பண்ணைத் திட்ட செயல்விளக்கம்**

First Published : 11 Jul 2011 07:14:43 AM IST

Last Updated : 11 Jul 2011 11:37:39 AM IST

திருவண்ணாமலை, ஜுலை 10: திண்டிவனம் எண்ணெய் வித்துகள் ஆராய்ச்சி நிலையம் சார்பில் காய்கறிகள் சாகுபடியில் துல்லிய பண்ணைத் திட்டம் குறித்த செயல்முறை விளக்க நிகழ்ச்சி சனிக்கிழமை மெய்யூர் கிராமத்தில் நடைபெற்றது.

நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் துரிஞ்சலாறு வடிநிலப் பகுதியில் 15 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மெய்யூர் கிராமத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமுக்கு திட்ட அலுவலர் முனைவர் பாஸ்கரன் தலைமை தாங்கி 40-க்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். முன்னோடி விவசாயி கருணாநிதி தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். இளநிலை ஆராய்ச்சியாளர்கள் அமலா, கோகிலா, பார்த்தசாரதி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**வாழை நார் தொழில்நுட்பம்: 12-ல் இலவச பயிற்சி**

First Published : 11 Jul 2011 10:46:37 AM IST

நாமக்கல், ஜூலை 10: வாழை மட்டையிலிருந்து நார் பிரித்தெடுக்கும் தொழில்நுட்பம் குறித்து, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் ஜூலை 12-ம் தேதி இலவசப் பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

இப்பயிற்சியில் வாழை நாருக்கான மட்டையைத் தேர்வு செய்யும் முறை, இயந்திரம் மூலம் வாழை நார் பிரித்தெடுத்தல், அதன் நன்மைகள், நாரைப் பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள் மற்றும் அதிலிருந்து தயார் செய்யப்படும் பொருள்கள் குறித்த விரிவான பயிற்சி அளிக்கப்படும்.

இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர் மற்றும் இளைஞர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல்-மோகனூர் சாலையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்தை அணுகலாம்.

மேலும் விவரங்களுக்கு, 04286-266345, 266244, 266650 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ரூ.10-க்கு 2 கிலோ தக்காளி**

First Published : 11 Jul 2011 10:23:51 AM IST

சங்ககிரி, ஜூலை 10: சங்ககிரியில் ஞாயிற்றுக்கிழமை தோறும் வராச்சந்தை கூடுகிறது. சங்ககிரி சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் இச்சந்தைக்கு வந்து காய்கறிகளை வாங்கிச் செல்வர்.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 10) நடைபெற்ற வாரச் சந்தையில் ஒன்னேகால் கிலோ நாட்டுத்தக்காளி ரூ.10-க்கும், பெங்களூர் தக்காளி 2 கிலோ ரூ.10-க்கும் விற்கப்பட்டது.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் இயந்திரங்கள்**

First Published : 11 Jul 2011 07:42:29 AM IST

Last Updated : 11 Jul 2011 11:39:42 AM IST

காஞ்சிபுரம், ஜூலை 10: காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் விவசாயப் பணிகளுக்கு தேவையான இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன.

÷இது குறித்து மாவட்ட ஆட்சியர் எஸ்.சிவசண்முகராஜா வெளியிட்ட அறிக்கை: வேளாண் பணிகளுக்கு இயந்திரங்கள் வாங்குவதற்கு மானிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

÷அதன்படி டிராக்டர் வாங்குவதற்கு 25 சதவீதம் வரை (அதிகபட்சம் ரூ.45 ஆயிரம்) மானியம் வழங்கப்படுகிறது.

÷பவர் டில்லர் வாங்குவதற்கு 40 சதவீதம் வரை (அதிகபட்சமாக ரூ.45 ஆயிரம்) மானியம் வழங்கப்படுகிறது.

÷ரோட்டவேட்டர் வாங்குவதற்கு

40 சதவீதம் வரை (அதிகபட்சமாக ரூ.20 ஆயிரம் வரை) மானியம் வழங்கப்படுகிறது.

÷அதேபோல் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளை இயக்கவும், பராமரிக்கவும் பயிற்சி அளிக்கப்படுகிறது என்றார்.

**"மூலிகைப் பயிர் சாகுபடிக்கு 75 சதவீதம் வரை மானியம்'**

First Published : 11 Jul 2011 07:42:14 AM IST

Last Updated : 11 Jul 2011 11:39:44 AM IST

காஞ்சிபுரம், ஜூலை 10:  காஞ்சிபுரம் மாவட்டத்தில் மூலிகை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 75 சதவீதம் வரை மானியம் வழங்கப்படுகிறது.

÷இது குறித்து செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகம் வெளியிட்ட அறிக்கை: காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேசிய மூலிகைப் பயிர்கள் இயக்கம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

÷இத் திட்டத்தின் மூலம் மூலிகை பயிர் சாகுபடிக்கு வருடாந்திர பயிர்களுக்கு 75 சதவீதம் வரையும், ஆண்டு பயிர்களுக்கு 20 சதவீதம் வரையும் பயிர்சாகுபடி செலவில் மானியமாக வழங்கப்படுகிறது.

÷ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 4 ஹெக்டேருக்கு இது வழங்கப்படும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஏல முறையில் தேங்காய் விற்பனை**

First Published : 11 Jul 2011 10:39:22 AM IST

நாமக்கல், ஜூலை 10: ஏல முறையில் தேங்காய் விற்பனை செய்தால் விவசாயிகள் அதிக லாபம் அடையலாம் என்று நாமக்கல் ஆட்சியர் ஜெ. குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: நாமக்கல் மாவட்டத்தில் சுமார் 16,500 ஏக்கர் பரப்பளவில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. தென்னையில் இருந்து கிடைக்கும் தேங்காய்கள் பல்வேறு கமிஷன் மண்டிகள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.
தேங்காயை மண்டிகளில் விற்பனை செய்வதற்கு பதிலாக, கபிலர் மலை வட்டாரத்தில் உள்ள சோழசிராமணி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் டெண்டர் முறை ஏலம் மூலம் விற்பனை செய்யலாம். இதில் தேங்காய்களுக்கு அதிகபட்ச விலை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. வரும் 13-ம் தேதி முதல், வாரந்தோறும் புதன்கிழமை இந்த ஏலம் நடைபெறும்.
அதேபோல், தேங்காய் பருப்பு விற்பனை செய்யும் விவசாயிகளுக்காக, பரமத்திவேலூர் ஒருங்குமுறை விற்பனைக் கூடத்தில் மூலம் வாரந்தோறும் வியாழக்கிழமை டெண்டர் முறை ஏலம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இது வரும் 14-ம் தேதியில் இருந்து நடைமுறைக்கு வருகிறது.
எனவே, தேங்காயாகவோ, பருப்பாகவோ விற்பனை செய்யும் விவசாயிகள் ஏலத்தின் மூலம் அதிகபட்ச விலையைப் பெற்றுப் பயனடையுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**பண்ணை செயல் திட்டம் விவரங்கள் சேகரிப்புப் பணி தொடங்கியது**

First Published : 11 Jul 2011 10:43:27 AM IST

திருச்செங்கோடு, ஜூலை 10: திருச்செங்கோடு வட்டாரத்தில் பண்ணை செயல் திட்டத்துக்காக, உதவி வேளாண் அலுவலர்கள் விவசாயிகளிடம் விவரங்களைச் சேகரித்து வருகின்றனர்.
சனிக்கிழமை தொடங்கிய இப்பணி, இம்மாதம் 29-ம் தேதி வரை நடைபெறுகிறது.
கருப்பகவுண்டம்பாளையம், மொளசி, முதலைப்பாளையம், பழைய புளியம்பட்டி, பொட்லிபாளையம், செங்கல்பாளையம், டி. புதுப்பாளையம், தேவம்பாளையம், ஆண்டிபாளையம், மணட்டுப்பாளையம், அக்கம்மாபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் இப்பணி நடைபெற்று முடிந்துள்ளது.
திங்கள்கிழமை மோடமங்கலம், கோட்டப்பாளையம், பட்லூர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சிறு, குறு விவசாயிகளிடம் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன என்று வேளாண் உதவி இயக்குர்(பொ) ராதாமணி தெரிவித்துள்ளார். சிறு மற்றும் குறு விவசாயிகள் அனைவரும் அலுவலர்களிடம் சரியான தகவலைக் கொடுத்து பதிவு செய்து கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**வேளாண் விளைபொருள்களுக்கு லாபகரமான விலை**

First Published : 11 Jul 2011 10:49:37 AM IST

சேலம், ஜூலை 10: விவசாய விளை பொருள்களுக்கு லாபகரமான விலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு கள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சேலம், 4 ரோடு அருகே நடைபெற்ற அந்த இயக்கத்தின் ஆலோசனைக் கூட்டத்துக்கு தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டமைப்பின் பொருளாளர் ஆடிட்டர் மு.பாலசுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

விவசாய விளை பொருள்களுக்கு லாபகரமான விலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசு நெல் கொள்முதல் விலையை ரூ. 1500 ஆக உயர்த்த வேண்டும். அரசி ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டும்.

தமிழகத்தில் மதுவிலக்குக் கொள்கையை அமல் செய்து, டாஸ்மாக் கடையில் பனை, தென்னை மூலப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பொருள்களை விற்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில், தமிழ்நாடு கள் இயக்க கள ஒருங்கிணைப்பாளர் செ.நல்லசாமி, தமிழக விவசாய சங்கத்தின் நாமக்கல் மாவட்டத் தலைவர் ஆர்.ராமசாமி, கள் இயக்க மாநில அமைப்பாளர் இல.கதிரேசன், தர்மபுரி மாவட்ட அமைப்பாளர் சீனிவாசன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தினமலர்

**விலை வீழ்ச்சியால் மஞ்சள் பயிரிடும் பரப்பளவு குறைகிறது**

ஜூலை 12,2011,00:23



கோவை: மஞ்சள் விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளதால், பாதிக்கப்பட்ட விவசாயிகள், நடப்பு பருவத்தில் மஞ்சள் பயிரிடும் பரப்பளவை குறைத்துக் கொண்டுள்ளனர்.பொதுவாக, மஞ்சள்

விதைப்பு பணிகள் ஜூன் - ஆகஸ்ட் வரை நடைபெறும். உற்பத்தியாகும் மஞ்சளை, ஜனவரி -மார்ச் மாதங்களில் விவசாயிகள் அறுவடை செ#வது வழக்கம்.

கடந்த இரு ஆண்டுகளாக, நாட்டில் மஞ்சளுக்கான தேவை அதிகரித்ததால், அதன் விலை உயர்ந்தது. 2009ம் ஆண்டு ஜனவரியில் 4,000 ரூபா#க்கு விற்பனையான ஒரு குவிண்டால் மஞ்சள், ஏப்ரல் மாதம் 5,200 ரூபாஎன்ற அளவிற்கு உயர்ந்தது. இதைத் தொடர்ந்து கிடு.. கிடுவென.. மஞ்சள் விலை இரண்டு மடங்கிற்கும் அதிகமாக உயர்ந்தது. 2010ம் ஆண்டு ஏப்ரல் மாதம், 12 ஆயிரத்து 500 ரூபா#க்கு விலை போன ஒரு குவிண்டால் மஞ்சளின் விலை, ஒரே மாதத்தில், அதாவது ஜூன் மாதம் 15 ஆயிரம் ரூபாயாக உயர்ந்தது.

மஞ்சள் விலை உயர்வால் மகிழ்ச்சியடைந்த விவசாயிகள், சென்ற ஆண்டில், மஞ்சள் பயிரிடும் பரப்பளவை அதிகரித்தனர். இதனால், தேசிய அளவில் மஞ்சள் பயிரிடும் பரப்பளவு 25 சதவீதம் உயர்ந்தது. இதன் விளைவாக, நடப்பு சந்தைப்படுத்தும் பருவத்தில், மஞ்சள் உற்பத்தி, 45 சதவீதம் அதிகரித்து 70 லட்சம் மூட்டைகளாக (ஒரு மூட்டை - 70 கிலோ) உயர்ந்தது. இது, சென்ற ஆண்டு 48 லட்சம் மூட்டைகள் என்ற அளவில் இருந்தது. நாட்டிலேயே மஞ்சள் உற்பத்தியில் ஆந்திரா முதலிடத்தில் உள்ளது. இம்மாநிலத்தில், மஞ்சள் உற்பத்தி 40 சதவீதம் அதிகரித்து 49 லட்சம் மூட்டைகளாக உயர்ந்தது.தமிழகத்திலும், மஞ்சள் பயிரிடும் பரப்பளவு 0.43 லட்சம் எக்டேர் என்ற அளவிற்கு அதிகரித்தது. இதனால் மஞ்சள் உற்பத்தி பெருகியது. இதையடுத்து, சென்ற ஆண்டு 7 லட்சம் மூட்டைகள் என்ற அளவில் இருந்த மஞ்சள் இருப்பு, நடப்பு பருவத்தில் 11 லட்சம் மூட்டைகளாக அதிகரித்துள்ளது.அதே சமயம், உற்பத்தியும், இருப்பும் அதிகரித்ததால் மஞ்சளுக்கான தேவை குறைந்து, விலை வீழ்ச்சியடையத் தொடங்கியுள்ளது. கடந்த ஆண்டை விட, இவ்வாண்டு மஞ்சள் விலை 50 சதவீதம் குறைந்துள்ளது. ஒரு குவிண்டால் மஞ்சள் தற்போது 7,000 - 7,300 ரூபாவரை விற்பனையாகிறது.சென்ற டிசம்பரில் பெ#த மழையால் மஞ்சள் விளைச்சல் பாதிக்கப்பட்டு, சந்தையில் இரண்டாம் ரக மஞ்சளின் வரத்து அதிகரித்துள்ளது. இதனால், இவ்வகை மஞ்சளை கொள்முதல் செ#வதில் ஏற்றுமதியாளர்களுக்கு ஆர்வம் குறைந்துள்ளது. இதன் காரணமாக, சென்ற மார்ச் மாதத்துடன் முடிவடைந்த 2010-11ம் நிதியாண்டில், மஞ்சள் ஏற்றுமதி 14 சதவீதம் குறைந்து 48ஆயிரத்து 250 டன்னாக சரிவடைந்துள்ளது. இது கடந்த 2009-10ம் நிதியாண்டில், 50ஆயிரத்து 750 டன் என்ற அளவில் உயர்ந்திருந்தது.உள்நாட்டில் மஞ்சள் இருப்பு அதிகரித்து, அதன் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாலும், ஏற்றுமதி வாய்ப்பு சரிந்துள்ளதாலும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து, பண்டிகைக் காலம் வரும் வரை, அடுத்த மூன்றாண்டுகளுக்கு மஞ்சள் விலை உயர வா#ப்பில்லை என்று, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தை சேர்ந்த உள்நாடு மற்றும் ஏற்றுமதி சந்தைக்கான ஆ#வுப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.விவசாயிகள், தங்களிடம் உள்ள மஞ்சளை எவ்வளவு விரைவாக முடியுமோ, அவ்வளவு விரைவாக விற்பனை செய்யுமாறு

அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதையடுத்து, விவசாயிகள், மஞ்சள் பயிரிடும் பரப்பளவை குறைத்துக் கொள்ளத் தொடங்கியுள்ளதாக தெரிகிறது.

**வரத்து அதிகரிப்பால் வாழைத்தார் விலை சரிவு**

ஜூலை 12,2011,00:16



நாமக்கல்: பரமத்தி வேலூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதிகளான பொத்தனூர், பாண்டமங்கலம், பிலிக்கல்பாளையம், வெங்கரை, அணிச்சம்பாளையம், குப்புச்சிபாளையம், பொய்யேரி, நன்செய் இடையாறு, ஓலப்பாளையம், பாலப்பட்டி, மணப்பள்ளி, மோகனூர், ஒருவந்தூர் உள்ளிட்ட காவிரிகரையோர பகுதிகளில், 5,000க்கும் மேற்பட்ட ஏக்கரில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது.இப்பகுதியில் பூவன், ரஸ்தாளி, மொந்தன், கற்பூரவள்ளி உள்ளிட்ட ரகங்கள் பயிரிட்பட்டுள்ளன. இங்கு உற்பத்தி செய்யப்படும் வாழைத்தார்கள் ப.வேலூரில் நடக்கும் தினசரி மார்க்கெட்டில் ஏலம் விடப்படுகிறது. அதில் நாமக்கல், கரூர், கொடுமுடி, ஈரோடு, கோவை, ஊட்டி, திண்டுக்கல், பழனி, திருச்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் வந்து ஏலத்தில் பங்கேற்பவர். ஏலம் எடுத்த வாழைத்தார்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.சென்ற வாரம் சூறாவளி காற்றடித்ததால் ஏராளமான வாழை மரங்கள் முறிந்துவிழுந்து விவசாயிகளுக்கு பலத்த நஷ்டத்தை ஏற்படுத்தியது. மேலும், தற்போது திருமணம், திருவிழா போன்ற விசேஷ தினங்கள் இல்லாததாலும், வரத்து அதிகரித்ததாலும் வாழைத்தார் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. 230 ரூபாய் முதல், 250 ரூபாய் வரை விற்ற பூவன் தார் சென்ற வாரம், 100 ரூபாய்க்கு விற்பனையானது. இதே போன்று, 150 ரூபாய்க்கு விற்ற ரஸ்தாளி, சென்ற வாரம், 120 ரூபாய்க்கு விற்பனையானது. 250 ரூபாய்க்கு விற்பனையான கற்பூரவள்ளி 180 ரூபாய்க்கு விற்றது. இதே நிலை இன்னும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் என்பதால், விவசாயிகள் மிகவும் கவலை அடைந்துள்ளனர்.

**வேளாண் கடன் உயருமா? எதிர்பார்ப்பில் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 12,2011,00:46 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் முந்தைய ஆண்டைக் காட்டிலும் வேளாண் கடன் தொகை அதிகமாக வழங்கப்படும், என, விவசாயிகள் ஆவலாக எதிர்பார்க்கின்றனர். வேளாண் தொழிலை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஈரோடு. நெல், மஞ்சள், கரும்பு போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. விவசாயிகளுக்கு தேவையான கடன்கள் அரசு மானியத்துடன் வங்கிகள் மூலம் வழங்கப்படுகின்றன. ஈரோடு மாவட்டத்தில் 2010 மார்ச் மாதம் வரை 1,882 கோடி ரூபாய் வேளாண் கடன் வழங்கப்பட்டிருந்தது. 2011 மார்ச் மாதம் வரை இத்தொகை 2,318 கோடி ரூபாயாக உயர்ந்தது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 23 சதவீதம் அதிகம். தற்போது, ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, தமிழக வேளாண் துறை அமைச்சராக ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த செங்கோட்டையன் பதவியேற்றுள்ளார். இதன்காரணமாக, "மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் விவசாயக் கடன் தொகை முந்தைய ஆண்டைக் காட்டிலும் இரட்டிப்பாகும். வங்கிகளில் விவசாயிகள் சுலபமாக கடன்பெறவும் வேளாண் அமைச்சர் நடவடிக்கை எடுப்பார்' என, ஈரோடு மாவட்ட விவசாயிகள் நம்பிக்கையில் உள்ளனர்.

**கரும்பு பயிரிட்ட விவசாயிகள் கண்ணீர் : சாத்தான்குளம் பகுதியில் கரும்புகள் காய்கிறது**

பதிவு செய்த நாள் : ஜூலை 12,2011,00:24 IST

சாத்தான்குளம் : தனியார் கம்பெனிகளின் தவறுதலான வழிகாட்டுதலால் கரும்பு பயிரிட்ட விவசாயிகள் கண்ணீர் வடிகின்றனர். கரும்பு பயிரிட ஏற்ற நீர்வளம், நிலவளம் இல்லாததால் எதிர்பார்த்த லாபம் கிடைக்கவில்லை. எனவே சர்க்கரை ஆலையினர் கரும்பு வெட்டுவதற்கு முன்வர மறுக்கின்றனர் என விவசாயிகள் வேதனைப்படுகின்றனர்.

விவசாயத்தில் நன்செய் பயிராகக் கருதப்படுபவை நெல், வாழை, கரும்பு இவற்றிற்கு அதிகமாக தண்ணீர் தேவைப்படும். இதில் நெல் மூன்று மாதத்திலும், வாழை 10 மாதத்திலும், கரும்பு ஒரு வருடத்திலும் அறுவடைக்கு தயாராகிவிடும். இந்த பயிர்கள் நல்ல நீர்வளமும், உவர்ப்பு தன்மையற்ற தண்ணீரிலும் அதிக மகசூல் தரும். சாத்தான்குளம் சுற்றுவட்டாரத்தில் விவசாயம் முழுவதும் கிணற்றுப் பாசானத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது. இதில் பல கிணறுகளில் தண்ணீர் துவர்ப்பு மற்றும் உப்புத் தன்மை உடையவை. இவைகள் மழைக்காலங்களில் சிறிது மாற்றமடையும். அந்த நேரத்தில் நெல் பயிரிடுவர். மற்ற காலங்களில் புன்செய் பயிர்களான கடலை, பருத்தி ஆகியவை சாகுபடி செய்யப்படும். தற்போது வேலைக்கு ஆட்கள் தட்டுப்பாடு உள்ளதால் புன்செய் பயிர் செய்வது வெகுவாக குறைந்து வருகிறது. நெல் பயிர் மெஷின் மூலம் அறுவடை செய்யப்படுகிறது. அதன் பிறகு வயல்வெளிகள் தரிசாக

விடப்படுகிறது. இந்த விவசாயிகளை தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகத்தினர் தொடர்பு கொண்டு கரும்பு சாகுபடி செய்யும் படியும், அதற்கு விதை, உரம் மற்றும் கரும்பு வெட்டுதல் முதலிய அனைத்தும் ஆலை நிர்வாகம் சார்பில் கடனாக வழங்கப்படும் என கூறினர். கரும்பு அறுவடை செய்யும்பொழுது கரும்பின் சர்க்கரை அளவை கணக்கிட்டு விலை நிர்ணயம் செய்து விவசாயிகளுக்கு செலவழித்த பணம் போக மீதிப் பணத்தை வழங்கி வந்தனர். இதில் முதல் போகம் கரும்பு அறுவடை செய்தபின் இரண்டாம் அடி வெட்டாமல் வளர்ந்து அறுவடை காலம் கடந்தும் கரும்பை வெட்டுவதற்கு உரிய வேலை ஆட்களை ஆலை நிர்வாகம் அனுப்பாததால் பல இடங்களில் 15 மாதம் ஆகியும் பல ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்ட கரும்பு வெட்டப்படாமல் உள்ளது. தற்போது கோடை வெப்பம் அதிகமாக உள்ளது. போதுமான தண்ணீர் இல்லாமல் கரும்பு வாடி வருகிறது. இதனால் விவசாயிகளுக்கு பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இது பற்றி கரும்பு பயிரிட்டுள்ள சாத்தான்குளம் பிரபு, ஸ்ரீகிருஷ்ணவேணி, சண்முகசுந்தரம் மற்றும் விவசாயிகள் கூறியதாவது,

நாங்கள் இரண்டாம் அடி கரும்பு வளர்த்து அறுவடைக்குத் தயாராகி மூன்று மாதம் ஆகிவிட்டது. சர்க்கரை ஆலை நிர்வாகத்தை பலமுறை தொடர்பு கொண்டும் கரும்பு வெட்டுவதற்கு தொழிலாளர்களை அனுப்பவில்லை. எங்கள் பகுதியில் தற்போது தான் கரும்பு பயிரிடப்பட்டுள்ளதால் இங்குள்ள தொழிலாளர்களுக்கு கரும்பு வெட்டப்போதிய அனுபவமும் இல்லை. வேறு வழிஇல்லாமல் ஆலை நிர்வாகத்தின் அனுமதியுடன் நாங்கள் கரும்பை வெட்டினோம். அந்தக் கரும்பையும் கொள்முதல் செய்ய காலம்தாழ்த்தி வருகின் றனர். ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்ட கரும்பிற்கும் பணம் பலருக்கு வழங்கப்படவில்லை. இந்த நிலை இன்னும் ஒருவாரம் நீடித்தால் அறுவடை செய்யப்பட்ட அனைத்து கரும்புகளும் அடிக்கின்ற வெயிலில் விறகாகப் போய்விடும் என வேதனையுடன் தெரிவித்தனர். பொதுவாக சாத்தான்குளம் பகுதி கரும்பு சாகுபடிக்கு ஏற்ற நீர்வளம் கொண்ட பகுதி அல்ல. ஒரு ஏக்கர் கரும்பு பயிரிட செலவழிக்கும் கிணற்று நீரிலிருந்து 20 ஏக்கர் பருத்திச் செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியும். எனவே நிலத்தடி நீர் அதிகமாக வீணாகிறது. இதனால் வறட்சி அதிகரிக்கவே செய்யும். மேலும் நல்ல நீரில் விளையாத கரும்பில் சர்க்கரை ஆலைக்கு தேவையான அளவு பிழிதிறன் இல்லை. எனவே இந்தக் கரும்பு சர்க்கரை ஆலைகளுக்கு மற்ற பகுதியில் உள்ளதுபோல் லாபம் தருவதாக இல்லை. குறைந்த அளவு லாபம் உள்ளதால் இரண்டாம் அடி கரும்புகளை கொள்முதல் செய்ய தயங்குகின்றனர். அதை விவசாயிகளிடம் தெரிவிக்காமல் உள்ளனர்.வேளாண்மை அதிகாரிகள் எந்தப் பகுதியில் என்ன பயிரிட வேண்டும் என விவசாயிகளுக்கு தகுந்த ஆலோசனை வழங்கினால் சுற்றுப்புறச்சூழல் பாதுகாக்கப்படுவதுடன் ஆசை வார்த்தைகளில் விவசாயிகள் மயங்கி தங்கள் நிலவளத்தையும், நீர்வளத்தையும் இழப்பது தவிர்க்கப்படும். உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்து கரும்பு பயிரிட்ட விவசாயிகளின் கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்பதே பாதிக்கப்பட்டவர்களின் எதிர்பார்ப்பாகும்.

**பயறு உற்பத்தி பெருக்க ரூ. 19.36 லட்சம் ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : ஜூலை 12,2011,00:44 IST

ஈரோடு : பயறு வகை பயிர்கள் உற்பத்தி பெருக்க, ஈரோடு மாவட்டத்துக்கு 19.36 லட்சம் ரூபாய் இந்தாண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தை பொறுத்த அளவில் பயறு வகை உற்பத்தி மிகவும் குறைவாக உள்ளது. இங்கு மற்ற பயிர்களில் ஊடுபயிராகவே பச்சை பயறு, பாசிப்பயறு உள்ளிட்ட பயறு வகைகள் பயிரிடப்படுகின்றன. உற்பத்தி பாதிக்கப்படுகிறது. பயறு வகைகளை தனியாக பயிரிட்டு, உற்பத்தி பெருக்குவதற்காக மத்திய அரசு, ஈரோடு மாவட்டத்தை பயறு வகை மாவட்டமாக அறிவித்து, தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 19.36 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.வேளாண் துணை இயக்குனர் (மத்திய திட்டம்) மாரியப்பன் கூறியதாவது: இத்திட்டத்தில், விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும், விதை வாங்கும் விவசாயிகளுக்கும் மானியம் அளிக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு பயிற்சி, பாதுகாப்பு கருவி, சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம் ஆகியவற்றுக்கு மானியம் உண்டு. பம்புசெட் மானியமாக 10 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**இயற்கை விவசாயத்தில் ஆர்வம் காட்டணும் நபார்டு வங்கி அதிகாரி வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 12,2011,00:03 IST

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி அருகே ஆதிரெங்கம் இயற்கை விவசாய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நுகர்வோர்களுக்கான விளைபொருட்கள் குறித்த கருத்தரங்கள் பஞ்சாயத்து தலைவர் முருகதாஸ் தலைமையில் நடந்தது. திருவாரூர் நபார்டு வங்கி உதவி மேலாளர் ரவிசங்கர் பேசியதாவது: நம்முடைய முன்னோர்கள் பாரம்பரிய நெல் ரகங்களை இயற்கையின் முறையில் சாகுபடி செய்து கொண்டார்கள். இறத்கு தக்கப்பூண்டு, கொழுஞ்சி, காவாளை போன்ற பசுந்தாள் உரச்செடிகளை பயிரிட்டு மடக்கி உழுது சாகுபடி செய்தார்கள். நஞ்சில்லாத உணவை உற்பத்தி செய்து நாட்டு மக்களுக்கு உணவு அளித்து வந்தார்கள். அந்த நிலையிலிருந்து மாறி ரசாயண உரங்களை பயன்படுத்தி சாகுபடி செய்து வந்÷தம். மீண்டும் இயற்கை விவசாயத்தில் இறங்கி பல்வேறு தொழில்நுட்பங்களுடன் நஞ்சில்லாத உணவு உற்பத்தி நடந்து வருகிறது. விளைநிலங்கள் எல்லாம் பிற உபயோகத்துக்கு பயன்படுத்துவதால் நெல் உற்பத்தியை பெருக்க இயற்கை விவசாயத்தில் விவசாயிகள் ஆர்வம் காட்ட வேண்டும். திருவாரூர் மாவட்டத்தில் உழவர்கள் மன்றம் மூலம் தேவையான பயிற்சிகள் உழவர்களுக்கு அளிக்கப்பட உள்ளது. அதனை பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு நபார்டு வங்கி பொதுமேலாளர் ரவிசங்கர் பேசினார். கடந்த ஐந்தாண்டாக திருவாரூர் நபாடு வங்கி உதவி பொதுமேலாளராக பணியாற்றி இடமாறுதல்

பெற்று வெளிமாநிலம் செல்லும் உதவி பொதுமேலாளர் ராகவன் சிறப்பாக பணியாற்றியதுக்காக கவுரவிக்கப்பட்டார். கிரியேட் பயிற்சி இயக்குனர் ஜெயராமன், திருத்துறைப்பூண்டி ஒன்றிய இயற்கை உழவர் இயக்க அமைப்பாளர் கரிகாலன், நாகை மாவட்ட அமைப்பாளர் சதாசிவம், கிரியேட் விதை வங்கி ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார், நம்பிக்கை தொண்டு நிறுவன இயக்குனர் சவுந்தராஜன், சேது கல்வி நிறுவன இயக்குனர் பரந்தாமன், தொண்டு நிறுவன ஆலோசகர் ஜான்சன் உட்பட பலர் பங்கேற்றனர். கிரியேட் பயற்சி உதவியாளர் ராஜசேகரன் நன்றி கூறினார்.

**வீணாகும் 60 சதவீத உணவுப்பொருள் : மத்திய வர்த்தக அமைச்சகம் தகவல்**

பதிவு செய்த நாள் : ஜுலை 12,2011,00:11 IST

மதுரை : ""இந்தியாவில் பழம், பருப்பு உள்ளிட்ட உணவு பொருட்களை பதப்படுத்தாததால் 60 சதவீதம் வரை வீணாகிறது,'' என, மத்திய வர்த்தக அமைச்சகத்தின் இந்திய பேக்கேஜ் மைய இயக்குனர் என்.சி.சாகா தெரிவித்தார்.

மதுரையில் அவர் நிருபர்களிடம் கூறியதாவது: உணவு பொருட்களை பதப்படுத்துவதால் உணவு பஞ்சம், விலை வாசி உயர்வை கட்டுப்படுத்த முடியும். உணவு பொருட்களுக்கான முறையான பராமரிப்பு, பாதுகாப்பு இல்லாததால் 60 சதவீதம் வரை வீணாகிறது. இதனால், நாட்டின் பொருளாதாரம் ஆண்டு தோறும் இழப்பை சந்தித்து வருகிறது. இழப்பை நிவர்த்தி செய்ய மீண்டும் உற்பத்தியை பெருக்க வேண்டியுள்ளது. இதற்கு தண்ணீர், உரம், தட்பவெட்ப நிலை சாதகமாக அமைய வேண்டும். பழம், பருப்பு, காய்கறிகள், இறைச்சி உள்ளிட்ட அனைத்து வகையான உணவு பொருட்களை முறையாக பதப்படுத்தினால் உண்பதற்கு ருசியாகவும், சத்து குறையாமலும் இருக்கும். இதனால், உழைப்பு, உற்பத்தி வீணாகாது; பொருளாதாரம் மேம்படும்.

மத்திய வர்த்தக அமைச்சகத்தின் உணவு பதப்படுத்தும் துறை மற்றும் இந்திய பேக்கேஜ் மையம் சார்பில், உணவு பொருள் பதப்படுத்துவது தொடர்பாக மதுரை பாண்டியன் ஓட்டலில் இன்று கருத்தரங்கு நடக்கிறது. மாலையில் பதப்படுத்தப்பட்ட உணவு கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனுமதி இலவசம். தென்னிந்திய அளவில் தொழில் முனைவோர் கலந்து கொள்கின்றனர். உணவு பொருள் பதப்படுத்தும் தொழில்நுட்பம், வர்த்தக ரீதியில் சந்திக்கும் பிரச்னைகள் குறித்து அதிகாரிகள், நிபுணர்கள் விளக்கம் அளிப்பர். பதப்படுத்தும் பிரிவின் சான்று, பட்டயம், முதுகல்வி பற்றி விவரம் கூறப்படும் என்றார். இணை இயக்குனர் ஜி.பி.ரெட்டி,

துணை இயக்குனர் பி.கே.கர்ணா, சென்னை மண்டல தலைவர் எம்.காசிவிஸ்வேஷ்வரன், மடீட்சியா தலைவர் சோமசுந்தரம், அலுவலர் கோலப்பன் உடனிருந்தனர்.

**மனித சிறுநீரை வேளாண் துறைக்கு பயன்படுத்தலாமா? : அண்ணாமலைப்பல்கலை வேளாண் துறை ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2011,23:07 IST

கடலூர் : வேளாண்மையில் மனித சிறுநீர் மற்றும் கழிவுகளை பயன்படுத்துவதால் உண்டாகும் சமூக பொருளாதார தாக்கம் பற்றி "வேர்எவர் நீட்' அமைப்புடன் வேளாண்துறை ஆய்வு மேற்கொண்டுள்ளன. பெருகி வரும் மக்கள் தொகையால் உற்பத்தியாகும் மனித கழிவுகளை மேலாண்மை செய்வது என்பது வளரும் நாடுகளில் பெரிய சவாலாக மாறி வருகிறது. பொதுவாக மனித சிறுநீர் நச்சுத்தன்மையற்றது என்றாலும் அதில் உள்ள யூரியா, குளோரைடு மற்றும் சோடியம் உப்புகள் சுற்றுச்சூழலை மாசுப்படுத்துகிறது.

மனித சிறுநீரை உரிய முறையில் பயன்படுத்தினால் விவசாயத்திற்கு பயன்படுத்தலாம். இதன் பயன்கள் தமிழகத்திற்கும் கிடைக்கச் செய்ய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் பொருளாதாரத் துறை சிறப்பு முயற்சிகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு கட்டமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் பொருளாதாரத் துறையும் இங்கிலாந்தில் உள்ள தொண்டு நிறுவனமான வேர்எவர் நீட் இணைந்து வேளாண்மையில் மனித சிறுநீர் மற்றும் கழிவுகளை பயன்படுத்துவதால் உண்டாகும் சமூக பொருளாதார தாக்கத்தினை ஆய்வு செய்ய உள்ளன.

இத்திட்டம் மூன்று ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படவுள்ளது. இதில் கடலூரில் உள்ள பிளஸ் தன்னார்வ தொண்டு நிறுவனமும் இணைந்து செயல்படுத்தவுள்ளது. நெல், கத்தரி, மக்காச்சோளம் போன்ற பயிர்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டம் வாயிலாக மனிதக்கழிவுகள் மூலம் வேளாண்மைக்குத் தேவையான சத்துக்களை சுற்றுச்சூழல் மாசின்றி பெற வாய்ப்புள்ளது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் ராமநாதன், வேளாண்புல முதல்வர் முனைவர் வசந்தகுமார் முன்னிலையில் இத்திட்டத்திற்கான முதல் தவணையாக 2 லட்சம் ரூபாய் காசோலையாக கொடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வேர்எவர் நீட் உலகத் தலைவர் டேவிட் கிராஸ் வெல்லர் இந்திய இயக்குனர் பரமசிவம் மற்றும் பிளஸ் தொண்டு நிறுவனம் தலைவர் அந்தோணிசாமி பங்கேற்றனர்.

**வரகு சாகுபடி பற்றி பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2011,23:11 IST

திட்டக்குடி : திட்டக்குடி அடுத்த அடரி கிராமத்தில், ஊட்டச்சத்து பாதுகாப்பின் வழியாக தீவிர சிறு தானியங்கள் உற்பத்தி பெருக்கு திட்டத்தின் கீழ் வரகு சாகுபடி குறித்த பயிற்சி முகாம் நடந்தது. மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் இளங்கோவன் தலைமை தாங்கி, வரகு சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கினார். வேளாண்மை துணை இயக்குனர் சந்திரமோகன், வரகு பயிரில் பின்செய் நேர்த்தி மற்றும் வரகு சந்தைப்படுத்துதல் குறித்தும், உதவி இயக்குனர் ராஜலட்சுமி விவசாயிகள் அதிக பரப்பளவில் வரகு சாகுபடி செய்வது குறித்தும் விளக்கினர். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் தேவராஜ், கார்த்திகேயன், சத்யா ஆகியோர் செய்திருந்தனர். விவசாயிகள் பலர் பயனடைந்தனர்.

**பருத்தி பூச்சி தாக்குதல் தவிர்க்க ஆலோசனை**

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2011,22:52 IST

ஸ்ரீவில்லிபுத்தூர் : பருத்தி செடிகளை மாவுபூச்சி தாக்குதலிலிருந்து காப்பாற்ற ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய முதல்வர் ஜெயராஜன் நெல்சன் ஆலோசனை தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்தாவது: பருத்தியில் மாவு பூச்சி தாக்குதலால் பாதிக்கப்பட்ட செடிகள் மஞ்சள் நிறமாக மாறி, வாடி காய்ந்து விடும். மாவு பூச்சிகள் வெளியேற்றும் தேன் போன்ற துளிகள் இலைகளில் படிந்து பள பள மின்னும். இதை குடிக்க வரும் எறும்புகள் மாவு பூச்சியின் குஞ்சுகளை அடுத்த செடிகளுக்கு எடுத்து சென்று பரப்பி விடுகின்றன. இப்பூச்சி பருத்தியை தவிர வெண்டை, புடலை, கோவை, செம்பருத்தி, புகையிலை , வாழை, கொய்யா, போன்ற செடிகளிலும் தாக்கப்படும். இந்நோயை கட்டுப்படுத்த வயலை சுற்றி சோளப்பயிரை நெருக்கமாக வேலி போல பயிரிட்டால் மாவு பூச்சிகள் வயலினுள் வருவது தடுக்கப்படும். பரிந்துரைக்கப்பட்ட அளவுகளை விட அதிகமாக தழைச்சத்து உரங்களை இடுவது தவிர்க்கப்பட வேண்டும்.

இதை கட்டுப்படுத்த மீதைல் பாரத்தியான் மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு மூன்று மில்லிவீதம் அல்லது குளோர்பைரிபாஸ் மருந்தினை ஒருலிட்டர் தண்ணீருக்கு 5 மில்லி வீதம் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு பயிர் முழுவதும் நனையும் படி தெளிக்க வேண்டும். மருந்து கரைசல் பயிரின் பாகங்கள், மாவு பூச்சிகளின் மீதுள்ள மாவு போன்ற படலத்தினுள் நன்கு பரவி படிவதற்காக வேளாண் திரவ சோப்புகளான சாண்டோவிட், இன்ட்ரான், ஸ்டிக்கால் ,தனுவெட் போன்றவற்றுள்ள ஏதேனும் ஒன்றினை ஒரு லிட்டர் மருந்து கரைசலுக்கு கால் மில்லி வீதம்

சேர்த்து கலக்கி தெளிக்க வேண்டும். பயிர் வளர்ச்சியை பொறுத்து ஏக்கருக்கு 200 முதல் 300 லிட்டர் வரை மருந்து கரைசலை தெளிக்க வேண்டும், என்றார்.

**நெல் பயிரிட விரும்பும் விவசாயிகள் அறிவியல் நிலையத்தை தொடர்பு கொள்ளலாம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2011,23:11 IST

விருத்தாசலம் : சம்பா பட்டத்தில் நெல் பயிரிட விரும்பும் விவசாயிகள் வேளாண்மை அறிவியல் நிலையத்தை தொடர்பு கொள்ளலாம் என திட்ட ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் சுப்ரமணியன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: கடலூர் மாவட்டத்தில் சம்பா பட்டத்திற்கு கோ 50 நெல் ரகம் ஏற்றதாகும். 130 - 135 நாட்கள் வயது கொண்ட இந்த ரகம் அதிக மகசூல் தர வல்லது. மேலும் மானாவாரி சாகுபடிக்கு அண்ணா 4 என்ற நெல் ரகம் ஏற்றதாகும். இது வறட்சியைத் தாங்கி வளரும்.
இதன் வயது 100 - 105 நாட்கள். களர் உவர் நிலத்திற்கு ஏற்ற திருச்சி 3 என்ற நெல் ரகம் 135 நாட்கள் வயது உடையது. எக்டருக்கு 5,833 கிலோ மகசூல் தர வல்லது. மேற்கண்ட மூன்று நெல் ரகங்களை பயிர் செய்ய விரும்பும் விவசாயிகள் விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள் ளது.

**தியாகதுருகம் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி : மழையால் மரவள்ளி பயிர் செழிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2011,23:16 IST

தியாகதுருகம் : தியாகதுருகம் பகுதியில் சாகுபடி செய்துள்ள மரவள்ளி கிழங்கு பயிர்கள் மழை காரணமாக செழித்து வளர்ந்துள்ளது. இதனால் மரவள்ளி பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதியில் செம்மண் விளைநிலங்கள் அதிகம் உள்ளன. இதில் பயிரிடப்படும் அனைத்து பயிர்களும் நன்கு செழித்து வளர்வதால் விவசாயிகள் அதிக லாபத்தை ஈட்டி வருகின்றனர். கிணற்று நீர் பாசனம் மூலமே அதிக பரப்பிலான நிலங்களில் புன்செய் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. நெல், கரும்பு அதிகளவில் இப்பகுதியில் பயிரிடப்படுகிறது.

இருப்பினும் செம்மண் நிலங்களில் கிழங்கு வகை பயிர்கள் நல்ல பலனை கொடுப்பதால் மஞ்சள், மரவள்ளி, கருணை போன்ற பயிர்களை சாகுபடி செய்வதில் சில விவசாயிகள் தொடர்ந்து ஆர்வம்

காட்டி வருகின்றனர். இதில் மஞ்சள் சாகுபடியை பொறுத்தவரையில் அதனை அறுவடை செய்து வேகவைத்து பக்குவப்படுத்தி விற்பனைக்கு எடுத்து செல்வதில் சிக்கல் உள்ளதால் பெரும்பாலான விவசாயிகள் இதனை தவிர்த்து வருகின்றனர். மரவள்ளி சாகுபடி தற்போது எளியவகை பயிராக உள்ளது. நடவு செய்து குறைந்த அளவு நீர் பாய்ச்சி பராமரித்தாலே நன்கு வளர்ந்து பலன் தருகிறது. பெரும்பாலும் அவ்வப்போது பெய்யும் மழை ஈரத்திலேயே செழிப்புடன் வளர்கிறது. இதனால் நீர்பற்றாக்குறை, மின்தடை பிரச்னைகளால் இப்பயிர்கள் பாதிக்கப்படுவது இல்லை. ஊட்ட சத்து உரங்களை இட்டு பராமரித்தாலே நன்கு வளர்ந்து கூடுதல் லாபத்தை ஈட்டித்தருகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக இப்பகுதியில் கரும்பு பயிரிடுவதில் பெரும்பாலான விவசாயிகள் ஆர்வம் காட்டி வருவதால் மரவள்ளி சாகுபடி பரப்பு குறைந்துவிட்டது. இதனால் மரவள்ளிக்கு கூடுதல் விலை கிடைத்து வருகிறது. நடவு செய்தவுடன் "சேக்கோ' பாக்டரியில் இருந்து புரோக்கர்கள் வந்து அறுவடைக்கு முன்பணம் கொடுத்து விடுகின்றனர். உரங்களையும் கடனாக தந்து உதவுவதால் விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. கடந்த மே மாதம் பெய்த மழையும், தற்போது பெய்துவரும் தென்மேற்கு பருவமழையும் மரவள்ளிகிழங்கு பயிர்கள் செழித்து வளர உதவியாக இருப்பதால் பயிர்கள் நன்கு ஊட்டமாக வளர்ந்துள்ளது. இதனால் எதிர்பாத்த பலனை மரவள்ளி கிழங்கு மூலம் பெறமுடியும் என்ற நம்பிக்கையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

# ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 2–வது சீசனுக்காக 2½ லட்சம் மலர் செடிகள் நடவு பணி தொடக்கம்



ஊட்டி தாவரவியல் பூங்காவில் 2–வது சீசனுக்காக மலர் செடிகள் நடவு செய்யும் பணி நடைபெற்ற போது எடுத்த படம்.

ஊட்டி, ஜூலை.12–

ஊட்டி அரசு தாவர வியல் பூங்காவில் 2–வது சீசனுக்காக 2½ லட்சம் மலர் செடிகள் நடவு செய்யும் பணி தொடங்கப்பட்டுள் ளது.

கோடை சீசன்

ஊட்டி நகரம் உலக அளவில் சுற்றுலா நகரமாக திகழ்கிறது. ஊட்டியில் மார்ச், ஏப்ரல், மே மாதங்கள் கோடை சீசன் காலம் ஆகும். இந்த சீசன் காலத்தில் ஊட்டிக்கு லட்சக் கணக்கான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்ற னர்.

ஊட்டி வரும் சுற்றுலா பயணிகள் ஊட்டியில் உள்ள புகழ்பெற்ற அரசு தாவர வியல் பூங்காவில் உள்ள மலர்கள், தாவரங்களை கண்டு ரசித்து செல்கின்றனர். மே மாதத்தில்

சுற்றுலா பயணிகளுக்காக தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி நடத்தப்படு கிறது.

2–வது சீசன்

ஜூன், ஜூலை மாதங்கள் மழை காலம் ஆகும். இந்த நேரத்தில் சுற்றுலா பயணிகள் வருகை மிகவும் குறைவாக இருக்கும். செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்கள் 2–வது சீசன் ஆகும். இரண்டாம் சீசனுக்கு இளம் திருமண தம்பதியர்கள் அதிகம் தேனிலவு அனுபவிக்க ஊட்டிக்கு வருகை தருகின்ற னர். இதனால் இந்த சீசனுக்கு தேனிலவு சீசன் என்ற பெயரும் உண்டு.

அந்த சமயத்தில் ஆயுத பூஜை, தீபாவளி, ரம்ஜான் போன்ற பண்டிகை கால விடுமுறை நாட்கள் வருவால் சுற்றுலா பயணிகள் 2–வது சீசனை அனுபவிக்க வருகை தருகின்றனர். இரண்டாம் சீசனை அனுபவிக்க வருகை தரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கவும், பள்ளி, கல்லூரி மாணவ–மாணவிகள் கண்டு களிக்கும் வகையில் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 2–வது சீசனுக்காக 2½ லட்சம் மலர் செடிகள் நடவு செய்ய முடிவு செய்யப்பட்டது.

பணி தொடங்கியது

இந்த மலர் செடிகள் நடவு செய்யும் பணி நேற்று தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் பிரகாசம் தலைமையில் தொடங்கியது.இது குறித்து தோட்டக்கலை உதவி இயக்குனர் பிரகாசம் நிருபர்களிடம் கூறிய தாவது:–

ஊட்டியில் 2–வது சீசன் செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்கள் ஆகும். இந்த சீசனுக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்காக பூங்காவில் பேன்சி, டெல்போனியா, கேண்டிடப், பிரெஞ்ச்மேரி கோல்டு, ஆப்பிரிக்கன் மேரி கோல்டு, இன்கா மேரி கோல்டு, கியுவியா மலர் செடிகள் 2½ லட்சம் நடவு செய்யப்படு கிறது.

தொடர்ந்து 7 ஆயிரம் தொட்டிகளில் மலர் செடிகள் நடவு செய்யப்படும். இந்த மலர் செடிகளில் ஆகஸ்ட் 3–வது வாரம் மலர்கள் பூக்க தொடங்கும்.

இவ்வாறு அவர் கூறி னார்.

# இயற்கை விவசாய உற்பத்தி ரூ.10,000 கோடியாகும்

பதிவு செய்த நாள் 7/12/2011 0:49:31



புதுடெல்லி: நாட்டின் இயற்கைவழி விவசாய உற்பத்தி மதிப்பு 2015&க்குள் ரூ.10,000 கோடியாக அதிகரிக்கும் என்றும், இதன் மூலம் பல லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் அசோசேம் நடத்திய ஒரு ஆய்வில் தெரிய வந்துள்ளது. இந்தியாவில் இயற்கை விவசாய உற்பத்தி பொருட்களின் மதிப்பு ரூ.2,500 கோடியாக உள்ளது. ஆண்டுக்கு 40 சதவீதம் வளர்ந்து வருகிறது. இதன்படி அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.10 ஆயிரம் கோடியாகும். மேலும் செயற்கை விவசாயத்தைவிட இயற்கை விவசாயத்துக்கு அதிக மனித உழைப்பு தேவைப்படும். அதாவது ஹெக்டேருக்கு 30 சதவீதம் அதிகம். இதன் அடிப்படையில் வேலை வாய்ப்பு அதிகரிக்கும்.